

தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் பேரூராட்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமை தஞ்சை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் சாக்கோட்டை கா.அன்பழகன் எம்.எல்.ஏ தொடங்கி வைத்து பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் சு.கல்யாணசுந்தரம் எம்.பி., முன்னாள் எம்.பி செ.இராமலிங்கம், ஒன்றிய செயலாளர்கள் உள்ளூர் டி.கணேசன், சுந்தர. ஜெயபால், ஜெ.சுதாகர், பேரூராட்சி தலைவர் புனிதா, மாவட்ட மருத்துவ அலுவலர் கலைவாணி உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள் அரசு அதிகாரிகள் உள்ளனர்.



அரியலூர் மாவட்டம் தா.பழுர் கிழக்கு ஒன்றியம் கன்டியங்கொல்லை கிராமத்தில் மறைதிரு முன்னாள் செயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர், மொழிப்போர் தியாகி க.சொ.கணேசன் அவர்களின் 20 ஆம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் செயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகரகழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டு மரியாதை செலுத்தினர் .

### சேலம் மாநகராட்சிப் பகுதிகளில்

# ரூ.3.07 கோடி மதிப்பீட்டிலான திட்டப்பணிகள்!

## அமைச்சர் இரா. இராஜேந்திரன் தொடங்கி வைத்தார்!

சேலம், ஆக.25-

சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் ரூ.3.07 கோடி மதிப்பீட்டிலான திட்டப் பணிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சிக்குப்பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்கள் அரசின் அனைத்து திட்டங்களையும் அனைத்து தரப்பு மக்களுக்கும் கொண்டு சேர்ப்பதில் முனைப்புடன் செயலாற்றி வரு கிறார்கள். குறிப்பாக பொதுமக்களுக்குத்தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர், சாலை வசதிகள், கழிவுநீர் கால்வாய்கள் அமைத்திடவும், நியாய விலைக்கடை கள், தெருவிளக்குகள், பொது பயன்பாட்டு கட்டடங்கள் உள்ளிட்டவற்றின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடவும் தேவையான நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் இன்றையதினம் சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் ரூ.3.07 கோடி மதிப்பீட்டிலான 14 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டு பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. இதில் சேலம் மாநகராட்சி, கோட்டம் எண். காந்தி தெருவில் (சின்ன கொல்லபட்டி) ரூ.14 இலட்சம் மதிப்பீட்டில் கான்கிரிட் சாலை அமைக்கும் பணியினையும், சேலம் மாநகராட்சி, அரசு மகளிர் கலைக்கல்லூரி அருகில் ரூ.18 இலட்சம் மதிப்பீட்டில் பயணியர் நிழற்கூடம் அமைக்கும் பணியினையும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று சேலம் மாநகராட்சி, கோட்டம் எண்.7 ஜட்ஜ் ரோடு போயர் தெருவில் ரூ.18 இலட்சம் மதிப்பீட்டில் கழிவுநீர் வாய்க்கால் அமைக்கும் பணியினையும், சேலம் மாநகராட்சி, கோட்டம் எண்.8 சரஸ்வதி நகர் அருகில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலை அமைக்கும் பணியினையும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், சேலம் மாநகராட்சி, அஸ்தம்பட்டி கன்னங்குறிச்சி ரோடு பகுதியில் ரூ.18 இலட்சம் மதிப்பீட்டில் பயணியர் நிழற்கூடம் அமைக்கும் பணியினையும், சேலம் மாநகராட்சி அரசு கலைக் கல்லூரி அருகில் ஆத்தூர் ரோடு பகுதியில் ரூ.18 இலட்சம் மதிப்பீட்டில் பயணியர் நிழற்கூடம் அமைக்கும் பணியினையும், சேலம் மாநகராட்சி கோட்டம் எண்.14 தொங்கும் பூங்கா வளாகத்தின் பின்புறம் ரூ.17 இலட்சம் மதிப்பீட்டில் நியாய விலைக்கடை கட்டடம் கட்டும் பணியினையும், சேலம் மாநகராட்சி, 4 ரோடு அருகில் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் பயணியர் நிழற்கூடம் அமைக்கும் பணியும் தொடங்கி வைக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து சேலம் மாநகராட்சி, கோட்டம் எண்.27 சின்னப்பன் வீதியில் ஏற்கனவே உள்ள சமுதாயக்கூடத்திற்கு ரூ.34 இலட்சம் மதிப்பீட்டில் முதல்தளம் அமைக்கும் பணியினையும், சேலம் மாநகராட்சி, கோட்டம் எண்.28 தாய் சேய் நலவிடுதிக்கு அருகில் ரூ.17 இலட்சம் மதிப்பீட்டில் நியாய விலைக் கட்டடம் கட்டும் பணியினையும், சேலம் மாநகராட்சி, கோட்டம் எண்.32 திப்பு சுல்தான் நகர் பகுதியில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் கான்கிரீட் சாலை அமைக்கும் பணியினையும் தொடங்கி வைக்கப்பட்டது.

மேலும், சேலம் மாநகராட்சி, கோட்டம் எண்.29 மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக வடக்குபுறத்தில் ரூ.17 இலட்சம் மதிப்பீட்டில் நியாய விலைக்கடை கட்டடம் கட்டும் பணியினையும், சேலம் மாநகராட்சி, கோட்டம் எண்.31 கண்ணன் தெருவில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாயக்கூடம் கட்டடம் கட்டும் பணியினையும், சேலம் மாநகராட்சி, கோட்டம் எண்.36 ல் ரூ.16 இலட்சம் மதிப்பீட்டில் சீலாவரி ஏரிக்கரை கான்கிரீட் சாலை அமைக்கும் பணி என மொத்தம் ரூ.3.07 கோடி மதிப்பீட்டிலான 14 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டு பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இன்றையதினம் அடிக்கல் நாட்டி வைக்கப்பட்ட அனைத்து பணிகளையும் உரிய கால அளவில் முடித்து பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் செந்தில்குமார், மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் எஸ்.செந்தில் குமார், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

### கரூர் மாநகராட்சியில்

# ரூ.7.41 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சி திட்டப்பணிகள்!

## செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்

கரூர், ஆக.25-

கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ. 7.41 கோடி மதிப்பீட்டில் 84 இடங்களில் புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை துவக்கியும், முடிவுற்ற பணிகளை மக்கள் பயன்பாட்டிற்கு கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி திறந்து வைத்தார்.

கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.7.41 கோடி மதிப்பீட்டில் 75 புதிய அரசு வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைத்தல், நிறைவடைந்த 9 திட்டப்பணிகளை மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. கரூர் மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல் தலைமை வகித்தார். கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி, நிறைவுபெற்ற பணிகளை பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தும், புதிய திட்ட பணிகளை தொடங்கி வைத்தும் பேசினார்.

வி.செந்தில்பாலாஜி கூறியதாவது

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தக் கூடிய வகையில் பல்வேறு புதிய சிறப்பு திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு, ஒவ்வொரு பணிகளாக நிறைவு செய்யப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படுகின்றன.

அந்த வகையில் கரூர் மாநகராட்சி வார்டு எண் 1, 2, 4, 5, 6, 7, 8, 21, 22, 23, 24, 25, 26, 29, 30, 31, 32, 33 மற்றும் 34 க்குட்பட்ட பகுதிகளில் உயர் மின் கோபுர மின் விளக்குகள் அமைக்கும் பணிகள், மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள். ஆழ்குழாய் கிணறுடன் கூடிய சின்டெக்ஸ் டேங்க் அமைத்து பைப் லைன் விஸ்தரிப்பு செய்தல் பணிகள், சிறு பாலங்கள் அமைக்கும் பணிகள், சாலை இணைப்பில் மராமத்து பணிகள், சிமெண்ட் சாலை மேம்படுத்தும் பணிகள் மற்றும் தார் சாலை மேம்படுத்தும் பணிகள் என மொத்தம் ரூ.7.41 கோடி மதிப்பீட்டில் 75 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைத்தும். 9 முடிவுற்ற பணிகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வந்துள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் மாநகராட்சி மேயர் வெ.கவிதா, மாநகராட்சி ஆணையர் சுதா. துணை மேயர் ப.சரவணன், மண்டல குழுத் தலைவர்கள் எஸ்.பி.கனகராஜ், ஆர்.எஸ். ராஜா, சக்திவேல், அன்பரசு, மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருச்சிராப்பள்ளி பஞ்சப்பூரில் புதிதாக திறக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள மின்தூக்கி, நகரும் படிகட்டுகள் உள்ளிட்ட நவீன வசதிகளுடன் கூடிய உட்கட்டமைப்பு வசதிகள், கண்காணிப்பு கேமராக்களின் கட்டுப்பாட்டு அறை செயல்பாடுகள் உள்ளிட்டவற்றை தமிழ்நாடு சட்டமன்ற பேரவை பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் / சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார், மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன் முன்னிலையில் பொது நிறுவனங்கள் குழு உறுப்பினர்கள் / சட்டமன்ற உறுப்பினர்கள் உடுமலை கே.ராதாகிருஷ்ணன் (உடுமலைபேட்டை), கடம்பூர் ராஜு (கோவில்பட்டி), மு.பெ.கிரி (செங்கம்) துரை.சந்திரசேகரன் (திருவையாறு), ம.சிந்தனை செல்வன் (காட்டுமன்னார் கோவில்), வி.பி.நாகைமாலி (கீழ்வேளூர்), ஒய்.பிரகாஷ் (ஓசூர்), டாக்டர் சி.விஜயபாஸ்கர் (விராலிமலை) ஆகியோர்களுடன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பேருந்து பயணிகளுடன் கலந்துரையாடினார். இந்நிகழ்வின்போது மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன், மாவட்ட வருவாய் அலுவலர் ர.ராஜலெட்சுமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தி.எஸ்.கங்காதாரிணி உள்ளிட்ட அரசுத்துறை உயர் அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

### ஜெயங்கொண்டம் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்

# க.சொ.கணேசன் 20 ஆம் ஆண்டு நினைவு நாள்!

## நினைவிடத்தில் மாலை அணிவித்து கழகத்தினர் மரியாதை!

அரியலூர், ஆக. 25-

அரியலூர் மாவட்டம் செயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன், தந்தை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், மொழிப்போர் தியாகி மறைதிரு க.சொ.கணேசன் அவர்களின் 20 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தா.பழூர் ஒன்றியம் கண்டியங்கொல்லை கிராமத்தில் அமைந்துள்ள அவரது நினைவிடம், மற்றும் திருவுருவ சிலைக்கு

கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

அதனை தொடர்ந்து தா.பழூரில் அமைதி ஊர்வலம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ. க.கண்ணன், கழக சட்ட திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர்,மாவட்ட பொருளாளர் கு.இராஜேந்திரன், மாவட்ட துணை செயலாளர் மு.கணேசன்,

பொதுக்குழு உறுப்பினர் சி.ஆர்.எம். பொய்யாமொழி, விசிக மாவட்ட செயலாளர் இரா.கதிர்வளவன்,ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் ஜெயங்கொண்டம் மத்தியம் இரா. மணிமாறன், ஆண்டிமடம் கிழக்கு ரெங்க.முருகன், தா.பழூர் மேற்கு ப.தனவேல், தா.பழூர் மத்தியம் இரா.அண்ணாதுரை, ஜெயங்கொண்டம் மத்தியம் நா.கணேசன், ஜெயங்கொண்டம் நகர செயலாளர், நகராட்சி துணைத் தலைவர் வெ.கொ.கருணாநிதி, உடையார்பாளையம் பேரூர் கழக செயலாளர் ப.கோபாலகிருஷ்ணன், தி.மு.க. தலைமை கழக பேச்சாளர் இரா.இளஞ்செழியன், விசிக ஒன்றிய செயலாளர் தங்கராசு,திக ஒன்றிய செயலாளர் வெங்கடாசலம்,மாவட்ட அணி அமைப்பாளர்கள் தங்க. ராமகிருஷ்ணன், எஸ்.ஆர். இராமராஜன், கொண்டியார் செல்வராஜ், போக்குவரத்துக் கழக மத்திய மண்டல தொமுச தலைவர் த. சேகர் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள்,சார்பு அணிகளின் நிர்வாகிகள்,கிளை கழக செயலாளர்கள், தோழமைக் கட்சியினர் மற்றும் கழக உடன்பிறப்புகள் பெருந்திரளாக கலந்துகொண்டனர்.



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் ஓசூரில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட அவை தலைவர் யுவராஜ் தலைமை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்கு மாவட்ட செயலாளர் பிரகாஷ் எம்எல்ஏ சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், ஓசூர் மாநகர மேயர் சத்யா, மாநில இளைஞர் அணி துணை செயலாளர் சீனிவாசன், துணை மேயர் ஆனந்தையா, மாவட்ட துணை செயலாளர்கள் சின்னசாமி, புஷ்பாசர்வேஷ், பொருளாளர் சுகுமார் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர் .



தர்மபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க. அண்ணா அறிவகம் அலுவலகத்தினை தர்மபுரி கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி எம்.பி. மற்றும் தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர் சுரேஷ் ஆகியோர் திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினர். இதில் முன்னாள் மாவட்ட செயலாளர் தடங்கம்.சுப்ரமணி,திமுக தேர்தல் பொறுப்பாளர்கள் செங்குட்டுவன்,பாரி,நகர செயலாளர் நாட்டான்.மாது,ஐ.டி.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் எம்.பி.கௌதம்,மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் உதயசூரியன், ஜெ.ராஜேஷ், ஈஸ்வர், யாஸ்மின், ரகு, கவின், ராகுல், காயத்ரி, முருகவேல் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.